# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.182/2023

## அ.சா. 2 (LW 2 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | கார்த்திக்ராஜா | **தொழில்** | |
| **த/க பெயர்** | கண்ணன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **06.10.2025.** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 9 எதிரிகள் ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது சாணார்பட்டியில் நத்தம்பாட்சா கடை தோட்டத்தில் குடியிருந்து வருகிறேன். லோடு மேனாக வேலை செய்கிறேன். 10 ம் வகுப்பு படித்துள்ளேன். வழக்கில் இறந்து போன கண்ணன் எனது அப்பா ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 14.05.2023 அன்று 03.30 மணிக்கு என் சித்தப்பா முருகன் என்னை தொலைபேசியின் மூலமாக என் அப்பா இறந்து விட்டதாக தெரிவித்தார். இறந்து போன அப்பா 03.15 மணி அளவில் என்னிடம் தொலை பேசியில் பேசினார். எப்போது நீ வீட்டிற்கு வருவாய் என கேட்டார். நான் இரவு வீட்டிற்கு திரும்பி விடுவேன் என கூறினேன். அப்போது எனது அப்பாவுக்கு உடல்நிலை சரியில்லை என ஆஜர் எதிரிகளான சின்னக்காளை, அழகி, நாச்சம்மாள், வெள்ளைச்சாமி, ஆகியோர்கள் என் தகப்பனார் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததை பார்க்க வந்ததாக என்னிடம் சொன்னார்கள். நீங்கள் எல்லோரும் வந்திருப்பதால் நானும் வந்து விடுகிறேன் என்றும் நான் வந்த பின்பு ஆஸ்பத்திரிக்கு அழைத்து செல்லலாம் என சொன்னேன். அதன்பின் 1/2 மணி நேரம் கழித்து என் சித்தப்பா முருகன் என்னை தொலைபேசி வாயிலாக அழைத்து அப்பா இறந்து விட்டார் என்றும் உடனே கிளம்பி வரும்படி கூறினார். பின்பு நான் வந்தவுடன் என் அப்பாவை பற்றி கேட்ட போது திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக கூறிவிட்டார். மறுநாள் சவக்கிடங்கில் நான் போய் பார்த்த போது என் அப்பா உடம்பில் நெற்றியில் இரத்தக் காயம் இருந்தது. உடல் முழுவதும் இரத்தம் இருந்தது. இது சம்மந்தமாக நானும் என் அம்மாவும் சாணார்பட்டி காவல்நிலையம் சென்று என் அப்பா ஆவி மரத்தில் இறந்து விட்டார் என்றும் நானும்

என் அம்மாவும் புகார் கொடுத்தோம். அந்த புகாரை நான்தான் எழுதினேன். அதிலுள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அது அ.த.சா.ஆ.2. ஆகும்.** மேற்படி நிலம் சம்மந்தமாக எனது தகப்பனாரும் எனது சித்தப்பா முருகன் என்பவரும் இளங்கோ என்பவரிடம் ரூ.4 லட்சம் கடனாக பெற்றிருந்தனர். அதில் ரூ.50 ஆயிரத்தை செலுத்தி விட்டோம். 2 நாட்களுக்கு முன்பு இளங்கோ வந்து மேற்படி கடன் கொடுத்த பணத்தை மீண்டும் கேட்டார். அப்போது என் அப்பாவுக்கும், இளங்கோவுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு என் அப்பா கல்லை விட்டு இளங்கோ மீது எறிந்தார். அப்போது இளங்கோ பயந்து புளியமரத்தின் பின் சென்று மறைந்து கொண்டார். பின்னர் நானும் என் மனைவி சின்னபொண்ணு, சித்தப்பா மகன் சதீஷ்குமார், அவரின் மனைவி பவித்ரா ஆகியோர்கள் சமாதானப்படுத்தி இளங்கோவை அனுப்பி வைத்தோம். சொத்தை விற்றாவது பணத்தை கொடுத்து விடுவதாக உறவினர்கள் கூறினார்கள். இளங்கோ சென்று விட்டார். பின்னர் நான் தொழிலுக்கு சென்று விட்ட பின்பு மறுநாள் என் அப்பா இறந்து விட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

14.05.2023 அன்று இரவு 09.00 மணிக்கு புகாரை காவல் நிலையத்தில் கொடுத்தோம். புகாரிலுள்ள சாட்சி கையெழுத்து மட்டும் என்னுடையது என்றும் அதில் உள்ள விவரங்களை நான் எழுதவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான்தான் எழுதி கொடுத்தேன். மீண்டும் சாட்சி மாற்றி கையெழுத்து மட்டும் தான் போட்டதாகவும் அதில் உள்ள விவரங்களை எழுதிக் கொடுத்தார் என சொல்கிறார். யார் எழுதிக் கொடுத்தது என்றால் என்னோடு வந்தவர் எழுதிக் கொடுத்தார். அவர் பெயர் சொல்ல முடியாது. என் அப்பா கடன் பிரச்சனையால் மனநிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரிதான். டென்சனாக இருந்தார்..

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.10.06 20:10:36 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.